DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.50/2022**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ஆனந்தம்மாள் | Caste: | |
| Husband Name: | அற்புதராஜ் | Calling: | விவசாயம் |
| Village: | பூலாங்குளம் | Religion: | |
| Taluk: | கடலாடி | Age: | 40 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 24.11.2025

(1ம் எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர். மனு 355 ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**முதன்மை விசாரணை**

நான் கடலாடி தாலுகா பூலாங்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி சாந்தகுமார் என் கொழுந்தன். சாட்சிகள் பெரியசாமி, மலைமாணிக்கம், பாண்டியம்மாள் மூவரும் பக்கத்து வீட்டுக்காரர்கள். சாட்சி சந்திரன் சம்பவத்தின்போது என் கணவரை தேடி வந்தார். அவர் ஆத்திக்குளத்தை சார்ந்தவர். சாட்சி அற்புதராஜ் என் கணவர். சாட்சிகள் ஜெயராமலிங்கம், தனிக்கொடி, ராமசாமி ஆகியோர்களை தெரியும். கீரந்தை கிராமத்தை சேர்ந்தவர்கள். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர். ஆஜர் 1ம் எதிரி சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த இந்து மறவர் சமூகத்தை சேர்ந்தவர். 2,3 எதிரிகள் 1ம் எதிரியின் மனைவி மற்றும் மகன் . நான் ஜனவரி 2020ம் ஆண்டு முதல் ஜனவரி 2025 வரை கீரந்தை பஞ்சாயத்து தலைவராக இருந்தேன். அதற்கு முன்பு நடைபெற்ற பஞ்சாயத்து தேர்தலிலும்

நான்தான் பஞ்சாயத்து தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்தேன். 1ம் எதிரி அவருக்கு சொந்தமான நிலத்தில் வீடுகட்ட பயன்படுத்தப்படும் மணலை அள்ளினார். 2020ம் ஆண்டுவாக்கில் எதிரி தன்னுடைய நிலத்தில் திருட்டுதனமாக அரசு அனுமதியின்றி இரவு நேரங்களில் மணல் அள்ளுவதை வாடிக்கையாக கொண்டிருந்ததால் ஊர்மக்கள் பஞ்சாயத்து தலைவி என்ற முறையில் என்னிடம் முறையிட்டார்கள். நான் எதிரிகள் மணல் அள்ளும் விவரம் ஊர்பொதுமக்கள் மூலமாக கிடைத்தவுடன் என் கணவர் மூலமாக காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிப்பேன். அந்த விவரத்தை அறிந்துகொண்டு எதிரி மணல் அள்ளாமல் இருந்துவிடுவார். அதனால் எதிரிகள் தன்னை மணல் அள்ள விடாமல் தடுத்ததால் என்றைக்கு இருந்தாலும் உன் கணவர் மற்றும் உன்னுடைய சாவு என் கையில் தான் என்று 25.04.2022ம் தேதி நான் என் வீட்டில் இருந்தபோது மதியம் 2.30மணியளவில் ஆஜர் 1ம் எதிரியும் , அவரது மனைவி மற்றும் மகனான 2,3 எதிரிகளும் என் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என் சேலையை பிடித்து இழுத்து 1ம் எதிரி என் மார்பை பிடித்து இழுத்து கையால் குத்தி கீழே தள்ளியதுடன் என்னை வீட்டிற்குள் இருந்து வெளியே இழுத்து வந்தார்கள். அப்போது பக்கத்தில் உள்ளவர்கள் வந்துவிட்டார்கள். பக்கத்தில் இருந்த பாண்டியம்மாள், மலைமாணிக்கம் மற்றும் ஊர்க்காரர்கள் சத்தம் கேட்டு வந்துவிட்டதால் அப்போது 1ம் எதிரி தன் கையில் வைத்திருந்த அருவாளை காண்பித்து இன்றைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் உன் கணவர் மற்றும் உன் சாவும் என் கையில்தான் என்று சொல்லிவிட்டு உன்னால் தான் மண் அள்ள முடியாமல் போய்விட்டது, பள்ள தேவுடியா முண்டை என்று அசிங்கமாக பேசினார். பக்கத்து வீட்டுக்காரர்களான மலைமாணிக்கம்,

பாண்டியம்மாள் மற்றும் அங்கு கூடிய ஊர்க்காரர்கள் விலக்கிவிட்டார்கள். கீரந்தை கிராமத்தை சேர்ந்த ஜெயராமலிங்கம், காந்தி, தனிக்கொடி, ராமசாமி ஆகியோர்களிடம் போன்மூலம் தகவல் சொன்னோம். அப்போது மேற்படி நபர்கள் எங்க ஊருக்கு வந்தார்கள். அவர்களிடம் எனது கொழுந்தன் சாந்தகுமார் சொல்லி பேசிக்கொண்டிருக்கும்போது 1ம் எதிரியின் மகன் முகேஷ்(3ம் எதிரி) என் கொழுந்தன் சாந்தகுமாரை காதோடு சேர்த்து அறைந்து கீழே தள்ளிவிட்டார். மேற்படி ஜெயராமலிங்கம், காந்தி, தனிக்கொடி, ராமசாமி ஆகியோர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே ஏன் இப்படி பேசுற,பன்ற என்று அவனை கண்டித்தார்கள். மேற்சொன்ன கீரந்தையை சேர்ந்த நபர்கள் வந்தபிறகும் எதிரிகள் பள்ள முண்டை, தேவுடியா முண்டை என அசிங்கமாக பேசினார்கள். என் கணவருக்கு தகவல் சொல்லி இரவு 8.00 மணிக்கு வந்தார். அதன்பிறகு நான், என் கணவர், கொழுந்தன் ஆகிய மூவரும் கீழச்செல்வனூர் காவல்நிலையத்திற்கு சென்று நடவடிக்கை எடுக்க புகார் எழுதி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்த புகார்தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1.** இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளேன். என் கணவர் என்ன படித்துள்ளார் என்றால் Phd, M.A.,M.Phil. B.Ed முடித்துள்ளார். எனக்கு முன்பாகவே என் கணவரின் தகப்பனார் கீரந்தை பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான். என் மாமனார் பாம்பு கடித்து இறந்துவிட்டதால் அதன்பின்பு நடைபெற்ற ஊராட்சி மன்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் சரிதான்.

நான் பி.கீரந்தை கிராமத்திற்கு பஞ்சாயத்து தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் சரிதான். பி. கீரந்தை ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்கள் உசிலங்குளம், சித்துடையான், பி.கீரந்தை, பூலாங்குளம், புத்தேந்தல் கிராமங்கள் என்றால் சரிதான். நான் பூலாங்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். பி.கீரந்தை பஞ்சாயத்துக்குட்பட்ட கிராமத்தில் எங்கள் சமூகத்தை சேர்ந்த மக்கள்தான் அதிகம் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் எதிரியின் சொந்த ஊர் இளம்செம்பூர் என்றால் சரிதான். 1ம் எதிரியின் மனைவி ஊர் பூலாங்குளம் என்றால் சரிதான். 1ம் எதிரியின் மாமனார் மற்றும் கைலாசம் என்பவருடைய குடும்பம் மட்டுமே மறவர் சமூகத்தை சேர்ந்த குடும்பங்கள் என்றால் சரிதான். தற்போது 1ம் எதிரியின் மனைவி குடும்பம் மட்டுமே உள்ளது என்றால் 1ம் எதிரியும் அவரது மனைவியும் குடும்பமும் பூலாங்குளத்தில்தான் வசித்து வருகிறார்கள். பூலாங்குளத்தில் எங்கள் சமூகத்தை சேர்ந்த குடும்பங்கள் 300 இருக்கும் என்றால் சரியல்ல. 150 இருக்கும். நான் மற்றும் என் கொழுந்தன் கட்டியுள்ள வீடுகள் எங்களுக்கு பூர்விக பாத்தியமான இடத்தில் இல்லை என்றால் சரிதான். கைலாசம் என்பவரிடமிருந்து வாங்கி கட்டியுள்ளோம் என்றால் அவரது அண்ணனிடமிருந்து வாங்கி கட்டியுள்ளோம். என் வீட்டிற்கு முன்பாக உள்ள இடங்களும் நான் என் வீட்டிற்கு செல்லும் பாதையும் 1ம் எதிரியின் மனைவியின் குடும்பத்திற்கு சொந்தமான இடங்கள் என்றால் சரியல்ல. 2020ம் ஆண்டுக்கு முன்பாக எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் எந்த பிரச்சனை இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரியின் குடும்பம் தேர்தலில் எனக்கு ஆதரவாக இருந்தது என்றால் சரியல்ல. நான் தேர்தலில் போட்டியிடும்போது என் கணவர் தேர்தல்

செலவுக்காக 1ம் எதிரியிடம் ரூபாய் 300000 கடன் வாங்கியிருந்தார் என்றால் இல்லை. என் கணவர் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்தாமல் காலம் கடத்தி வந்ததால் 1ம் எதிரி கீழச்செல்வனூர் காவல்நிலையத்தில் என் கணவர் மீது ஒரு புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் என் கணவர் வட்டியில்லாமல் அசல் ரூபாய் 300000 ஐ திருப்பி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு என் கணவர் என்னுடைய தேர்தலுக்காக 1ம் எதிரியிடம் பணம் வாங்கிய விவரமும் பின்னிட்டு 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் என் கணவர் திருப்பி செலுத்திய விவரம் நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய திருமணம் கிறிஸ்தவ மத முறைப்படி மோதிரம் மாற்றிதான் திருமணம் நடந்தது என்றால் சரிதான். என் கணவரின் தகப்பனார் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். என்னுடைய குழந்தையின் பெயர்கள் ஜஸ்டினா, ஜஸ்டின் என்றால் சரிதான். என் கணவரும் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர் என்றும், என் குடும்பம் கிறிஸ்தவ மத வழிபாடுகளை பின்பற்றுகிறோம் என்றும் தேவாலயத்திற்கு சென்று வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நானும் கிறிஸ்தவ மதத்தை தான் பின்பற்றுகிறேன் என்றும் அதனால்தான் இன்றுகூட இந்து மத முறைப்படி என்னுடைய நெற்றியில் பொட்டு இல்லாமல் வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் கணவரின் ஆலோசனையின்பேரில் சட்டத்திற்கு விரோதமான ஊராட்சி மன்ற தலைவராக இருப்பதற்காக இந்து மதத்தை சேர்ந்த பள்ளர் என போட்டியிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி மண் அள்ளியது சம்பந்தமாக இதுவரை காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது.

என் கணவர் மீது மண் அள்ளியது சம்பந்தமாக சிக்கல் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது தவறான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் என் கணவர் மற்றும் சதீஷ்குமார் மீது மற்றொரு மண் திருட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சி அரசு பள்ளிக்கூடம் கட்டுவதற்காக அரசிடம் அனுமதி பெற்று மண் அள்ளியதாக கூறுகிறார். என் கணவர் ஒரு பெண்ணை கடத்தி சென்று அசிங்கப்படுத்திவிட்டதாக கீழச்செல்வனூர் காவல்நிலையத்தில் கு.எண். 8/2019 என ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பொய் வழக்கு. அதேபோல் ஒரு பெண்ணுக்கு எதிராக பஞ்சாயத்து பேசியதால் அந்த பெண் தற்கொலை செய்துகொண்டதால் என் கணவர் மற்றும் சில நபர்கள் மீது கீழச்செல்வனூர் காவல்நிலையத்தில் கு.எண். 81/2020 என ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என் கணவர் மீது தவறாக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது. நான் பஞ்சாயத்து தலைவியாக இருக்கும்போது அரசு பணத்தை முறைகேடு செய்து கையாடல் செய்ததால் 1ம் எதிரி அரசு அதிகாரிகளிடம் புகார் செய்தார் என்றால் நான் எந்த கையாடலும் செய்யவில்லை. என் கணவர் மண் அள்ளி விற்று முறைகேடு செய்ததால் 1ம் எதிரி குடும்பம் அதற்கு இடைஞ்சலாக இருபப்தால் அவரை ஊரை விட்டு காலி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் என் கணவரின் ஆலோசனையின்பேரில் ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் மனைவிக்கு சொந்தமான சொத்துக்கள் எங்கள் வீட்டிற்கு முன்பாக உள்ளது என்றும அந்த சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தவறான புகார்கொடுத்து எதிரிகளை ஊரை விட்டு விரட்ட

வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. கொடுத்த பணத்தை காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வாங்கிவிட்டார்கள் என்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என் கணவர் அடியாட்களை அழைத்து வந்து இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நாளுக்கு முதல் நாள் அவரை அடித்து அதுசம்பந்தமாக அவர் புகார் கொடுத்து என்னையும் என் கணவரையும் கீழச்செல்வனூர் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள் என்றும் எதிரிகள் ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருந்தும் நான் ஊராட்சி மன்ற தலைவியாக இருந்தும் புகார் கொடுத்துவிட்டார்களே என்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரும் உறவினர்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் எதிரிகள் சாதியை சொல்லி இழிவுபடுத்தி பேசவில்லை என்றும், சேலையை பிடித்து இழுத்து, மார்பை பிடித்து இழுத்தும் அடித்து கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும் நான் எதிரிகள் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் புகார் கொடுக்கவில்லை என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)